2020, 2021 ஆம் ஆண்டுகளில் நாடு பூராகவும் நிலவிய கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக அரச வெசாக் கொண்டாட்ட நடவடிக்கைகளை திட்டமிடப்பட்டவாறு மக்களின் பங்குபற்றுதலுடன் நடாத்த முடியவில்லை. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க பலாங்கொட கூரகல ரஜ மஹா விகாரையை மையமாகக் கொண்டு வெசாக் போயா தின நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.





01.5.6.3 பொசொன் கொண்டாட்டத்தை அரசாங்க அணுசரனையின் கீழ் நடாத்துதல்.

வருடாந்த அரச பொசொன் கொண்டாட்டம் மிஹிந்தலை ரஜமஹா விகாரையை மையமாகக் கொண்டு இடம்பெறுகின்றது. 2022 ஆம் ஆண்டில் பொசொன் அரச கொண்டாட்டம் அதி சங்கைக்குரிய மகாநாயக்க, அனுநாயக்க தேரர்களின் தலைமையில் இடம்பெற்ற அதே வேளையில் அதற்காக இந்தத் திணைக்களத்தின் பங்களிப்பை வழங்குவதற்கு வாய்ப்புக் கிடைத்தது






01.5.6.4 சுதந்திர தின கொண்டாட்டங்களின் பொருட்டு இடம் பெறுகின்ற பரித்தான தர்ம போதனை மற்றும் சமய சடங்குகள்

தேசிய சுதந்திர தினத்தின் பொருட்டு நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆசி வேண்டி சுதந்திர சதுக்க வளவில் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியன்று இரவு பிரித் வைபவம் மற்றும் அடுத்த நாள் சங்க கத்த தக்சினாவ இடம்பெறும். மூன்று நிகாயகளினதும் மகாநாயக்க தேரர்களின் ஆலோசணையின் பேரில் வருடா வருடம் நிகாய தரப்பு மாறி மாறி இதன் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிலும் குறைந்த மக்களின் பங்களிப்புடன் பரித்தான தர்ம போதனை இடம்பெற்றது.

தேசிய சுதந்திர தினத்தன்று முற்பகலில் இடம்பெறுகின்ற சர்வ மத நிகழ்வுகளில் பௌத்த மத நிகழ்வுகள் ஒரு விகாரையை மையமாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் சுதந்திர தின சமய நிகழ்வுகள் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதியன்று காலையில் நாரஹேன்பிட்ட அபயராம விகாரையில் நடாத்தப்பட்டது.

74 ஆவது தேசிய சுதந்திர தின வைபவத்திற்கு இணையாக கொழும்பு 07 இல் அமைந்துள்ள சுதந்திர மாளிகையில் இடம் பெற்ற பிரித் வைபவம் மற்றும் நாரஹேன்பிட்ட அபயராம விகாரையில் இடம்பெற்ற வைபவம், ஹுனுபிட்டிய கங்காராம விகாரையில் இடம்பெற்ற சமய வைபவங்கள் ஆகியவற்றின் பொருட்டு ரூபா 1.2 மில்லியன் செலவிடப்பட்டது.








01.5.6.5 தகனம் செய்யும் சடங்கு

காலஞ்சென்ற மகாநாயக்க தேரர்களின் தகனக் கிரியைகள் முழு அரச மரியாதையுடனும், முன்னணி நாயக்க தேரர்களுக்கு அரச அனுசரணையுடனும் உள்ளூர் பிக்குகளுக்காக ஏற்பாடுகள் வழங்குவதன் மூலமும் பௌத்த பிக்குகளின் இறுதிக் கிரியைகள் நடத்தப்படுகின்றன. 2022.01.01 முதல் 2022.12.31 வரை வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்வருமாறு.

தொடர் இல.	மாதம்	காலஞ்சென்ற தேரர்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்டுள்ள மொத்த நிதி ஏற்பாடு
01	சனவரி	26	252,500.00
02	பெப்ரவரி	20	757,500.00
03	மார்ச்	27	240,000.00
04	ஏப்ரல்	29	285,500.00
05	மே	26	280,000.00
06	ஜூன்	18	215,000.00
07	ஜூலை	18	170,000.00
08	ஆகஸ்ட்	42	390,000.00
09	செப்டம்பர்	18	192,500.00
10	ஒக்டோபர்	32	307,500.00
11	நவம்பர்	24	247,500.00
12	டிசம்பர்	40	257,500.00
	மொத்தம்		3,595,500.00






.

01.5.6.6 உபசம்பதா விழாக்கள்

சாசனம் வாழ்வதற்கு நல்ல ஒழுக்கமுள்ள தேரர்கள் இருப்பது இன்றியமையாத ஒரு விடயமாகும். இதன் அடிப்படையில் அனைத்து நிகாய தரப்பினரும் இணைந்து நடாத்தும் உபசம்பதா விழாக்களுக்கு அரச அனுசரணையின் கீழ் பௌத்த அலுவல்கள் திணைக்களம் அனைத்து புதிய உபசம்பதா பெறுபவர்களுக்கும் தலா 3000 ரூபாவை வழங்கவுள்ளது. இதன் கீழ், 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பின்வருமாறு.

தொடர் இல.	பிரிவினர்	உபசம்பதாவை எதிர்பார்க்கும் துறவிகளின் எண்ணிக்கை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் (ரூபா)
01	சியாமோபாலி குல மஹா நிகாயாவின் மல்வத்து பிரிவினர்	*400*	*1,200,000.00*
02	அமரபுர மகா நிகாயாவின் ராஸ்ஸகல பிரிவின் உபசம்பதா	*10*	*30,000.00*
03	இலங்கை ராமஞ்ஞ மகா நிகாய	*379*	*1,137,000.00*
04	சியாமோபாலி வங்சிக மகா நிகாயாவின் ஸ்ரீ ரோஹண மகா சங்க சபை	*30*	*90,000.00*
மொத்தம்		**819**	**2,457,000.00**



01.5.6.7 ஜய பிரித் சஜ்ஜாயனம் -2022

அதி மேதகு சனாதிபதி அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைவாக "சௌபாக்கியம் மிக்க புது வருடத்திற்கான மும்மணிகளின் ஆசிர்வாதம்" எனும் தொணிப்பொருக்கு இணங்கியதாக ஜய பிரித் சஜ்ஜாயன பிங்கம 2022 சனவரி மாதம் 26 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் சங்கைக்குரிய மகாநாயக்க தேரர்கள் ஆயிரம் பேரின் பங்குபற்றலுடன் இடம் பெற்றது.

அந்த ஜய பிரித் போதனைக்காக வந்திருந்த தேரர்களுக்குத் தேவையான போக்குவரத்துச் செலவுகள் மற்றும் இதர வசதிகளைச் செய்வதற்காக ரூபா 591,475.00 செலவிடப்பட்டது.



01.5.6.8 மகாநாயக்க தேரர்களின் பொருட்டு நடாத்தப்படுகின்ற விசேட வைபவ சான்றிதழ் பரிசளிப்பு விழா

இலங்கை அமரபுர மகா நிகாயவின் நான்காவது உயர் பீட மகாநாயக்க தேரர், அமரபுர ஸ்ரீ கல்யாணிவங்ச மகா நிகாயவின் மகாநாயக்க தேரர், அமரபுர கணபாமொக்காச்சரிய, கல்யாணிவங்ச கீர்த்தி ஸ்ரீ வங்கீச வங்சாலங்கார விபஸ்ஸனா கம்மட்டாநாசாரிய, அக்க மகா பண்டித, அதி சங்கைக்குரிய தொம்பஹல சந்திர ஸ்ரீ தேரருக்கு அபிநவ பதவி பற்றிய சான்றிதழ் வழங்கும் வைபவம் 2022.01.14 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் இடம்பெற்றது.

இலங்கை ராமஞ்ஞ நிகாயவின் 14 ஆவது மகாநாயக்க பதவிக்கு நியமனம் பெற்ற அதி சங்கைக்குரிய அக்க மகா பண்டித மக்குலேவ ஸ்ரீ விமல தேரருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் 2022.05.07 ஆம் திகதியன்று ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ அவர்களின் பங்குபற்றுதலுடன் கொழும்பு 07 இல் உள்ள சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.







01.5.6.9 சாசன ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள்

புத்த சாசனத்தின் உயர்வையும் மேன்மையையும் நாடு பூராகவும் உள்ள புத்த சாசன அமைப்புகளை வலுவான நிலையில் பேணி வருவதற்குத் தேவையான அரசாங்கத்தின் அணுசரனை வழங்கப்படுகின்றது. சக்திமிக்க பௌத்த தலைவர் ஒருவரின் ஊடாக ஆத்மீகம் நிறைந்த சமூகமொன்றை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.

01.5.6.9.1 சாசனப் பாதுகாப்பு சபையை நடைமுறைப்படுத்துதல்.

புத்த சாசனத்தின் நலன்களை மேம்படுத்துவதற்கும் பிக்கு சமூகத்தை அபிவிருத்தி செய்வதற்கும் 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபையின் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபையை நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவது பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் அகில இலங்கை, மாவட்ட மற்றும் பிராந்திய சாசனப் பாதுகாப்புச் சபைகளின் வாக்கெடுப்புகளை நடாத்துதல், நிறைவேற்றுச் சபைக் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் நாடு பூராகவும் பிராந்திய சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயளாளர் நாயகம் தேரர்களுக்கு எழுது பொருட்கள் மற்றும் பயணச் செலவுக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்காக பின்வருமாறு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டம்	செலவிடப்பட்ட தொகை (ரூபா)
அகில இலங்கைச் சாசனப் பாதுகாப்புச் சபையின் பொதுக் கூட்டங்கள் மற்றும் நிறைவேற்றுச் சபைக் கூட்டங்கள் (பயணச் செலவு மற்றும் இதர வசதிகளுக்காக)	561,860.00
பிராந்திய சாசனப் பாதுகாப்புச் சபையின் பதிவாளர் தேரர்களுக்கு எழுது பொருட்கள், தபால் மற்றும் பயணச் செலவுகள்.15000X 326	4,890,000.00
மாவட்ட சாசனப் பாதுகாப்புச் சபையின் பதிவாளர் தேரர்களுக்கு எழுது பொருட்கள், தபால் மற்றும் பயணச் செலவுகள். 7500X 24	180,000.00
அகில இலங்கைச் சாசனப் பாதுகாப்புச் சபையின் பதிவாளர் தேரர்களுக்கு எழுது பொருட்கள், தபால் மற்றும் பயணச் செலவுகள்.	25,000.00
மொத்தச் செலவுகள்	**5,656,860.00**

இதற்கு மேலதிகமாக, சாசனப் பாதுகாப்புச் சபைகளின் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக பிரதேச செயலகங்களில் பௌத்த அலுவல்கள் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கு கணனி உட்பட அலுவலக உபகரணங்களை வழங்குவதும் இந்தத் திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. 2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் விபரம் பின்வருமாறு:

மாவட்ட	பிரதேச செயலகப் பிரிவு	தொகை
இரத்தினபுரி	கல்தொட்ட	210,450.00

01.5.6.9.2 சில் மாதா சபைகளை நடைமுறைப்படுத்தல்.

2002 ஆம் ஆண்டில் புத்த சாசன ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக சில் மாதா தேரர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளையில், இதன் கீழ் தேசிய, மாவட்ட, பிரதேச மட்டத்தில் சில்மாதா சபைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த சில்மாதா சபைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2002 ஆம் ஆண்டில் 02 அகில இலங்கை தேசிய சபைக் கூட்டங்களும், 02 மாவட்ட சில்மாதா சபைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம், சில்மாதா சபைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 2022 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூபா 849,500.00 ஆகும்



01.5.6.9.3 நிகாய தலைமை அலுவலகங்களை நடாத்திச் செல்லுதல்.

நிகாய தலைமை அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக அந்தந்த நிகாயவின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற வழிபாட்டுத் தலங்களின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொண்டு அலுவலகத்திற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இதன் கீழ் அலுவலக ஊழியர்கள் மற்றும் சாரதிகளுக்கான கொடுப்பனவாக மாதமொன்றுக்கு ரூபா 20,000.00 வீதம் ஒரு வருடத்திற்கு 240,000.00 வரை இரண்டு சந்தர்ப்பங்களில் கிடைக்கக் கூடியவாறு வழங்கப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டில் பின்வருமாறு செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிகாய பிரிவு	வழங்கப்பட்ட தொகை
சியம் பிரிவின் மல்வத்து பிரிவு	240,000.00
அஸ்கிரி தரப்பு	240,000.00
இலங்கை அமரபுர மகா நிகாய	240,000.00
இலங்கை ராமஞ்ஞ மகா நிகாய	240,000.00
இலங்கை கோட்டே கல்யாணி சாமகிரி சங்க சபை	240,000.00
மொத்தம்	***1,200,000.00***

01.5.6.10 பௌத்த கலைக்களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல்.

பௌத்த கலைக்களஞ்சியம் என்பது பௌத்த சமயத்திற்குரிய சகல விடயங்களினதும் பிரதான எண்ணக்கருக்களை விபரிக்கின்ற அடிப்படை பௌத்த கிரந்தம் ஆகும்.

அதற்கு அமைவாக தேரவாதி, மகாயான மற்றும் வஜ்ரயான ஆகிய சகல பௌத்த பாரம்பரியங்களுக்கும் உரித்தான பௌத்த சித்தாந்த மற்றும் கலாச்சார மதிப்பைக் கொண்ட நபர்கள் கிரந்தங்கள், எண்ணக்கருக்கள் அதே போன்று தொல்பொருள் பெறுமதியைக் கொண்ட இடங்கள் அனைத்தையும் பற்றி விளக்கக் கட்டுரைகளை உள்ளடக்குவது இந்தக் கிரந்தத்தின் மரபு ரீதியான செயல்முறையாகும். அது காலத்திற்கு ஏற்ற விதத்தில் இற்றைப்படுத்த வேண்டிய அதே வேளையில் உலகில் பௌத்த தர்மம் அபிவிருத்தி அடைவதற்கு இணையாக தொடர்ச்சியாக அபிவிருத்தியடைய வேண்டிய ஒரு கிரந்தமாகும். இதன் அடிப்படை நோக்கம் பௌத்த தர்மத்திற்குரிய ஆய்வில் அல்லது ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற உலகின் எந்தவொரு ஆய்வாளருக்கும் தேவையான அடிப்படை விடயங்கள் பற்றிய புரிந்துணர்வை வழங்குவதாகும்.

இது தவிர பௌத்த தர்மம் பற்றி ஆர்வம் காட்டுகின்ற அறிஞருக்கு பௌத்த தர்மத்தில் காணப்படுகின்ற எந்தவொரு எண்ணக்கருவையும் பற்றிய சிறந்ததொரு புரிந்துணர்வைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தக் கிரந்தம் உறுதுணையாக இருக்கும். தற்போது 08 இதழ் கிரந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளையில் எதிர்காலத்தில் அது 12 இதழ் கிரந்தங்கள் வரை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டிற்கு பௌத்த கலைக்களஞ்சியத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் அளவு ரூபா 6.33 மில்லியன் ஆகும். பிரதான ஆசிரியரின் சம்பளக் கொடுப்பனவு, பிரதி ஆசிரியரின் சம்பளக் கொடுப்பனவு மற்றும் புத்த ஜயன்தி புத்தக நிலையகத்திலும் வேயங்கொட புத்தக களஞ்சியத்திலும் விற்பனைக்கான புத்தகங்கள் முடிவடைந்திருந்தபடியினால், பௌத்த கலைக்களஞ்சியத்தின் 04 இதழ் புத்தகங்கள் 500 உம் 06 இதழ் புத்தகங்கள் 500 உம் அச்சிடல் உட்பட மொத்தச் செலவு ரூபா 6,036,812.00 ஆகும்.

01.5.6.11 பௌத்த கலைக்களஞ்சியத்தை இற்றைப்படுத்தி இணையத்தளத்தில் சேர்த்தல்.

சர்வதேச பௌத்த மக்களுக்கு பௌத்த அறிவுத் தொகுதியை விரிவுபடுத்துவதற்காக இது மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது குறியீட்டு இதழைத் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்ற அதே வேளையில் இந்த வருடத்தின் இறுதியில் குறியீட்டு இதழ்களைப் புத்தகமாக அச்சிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பௌத்த கலைக்களஞ்சியத்தை இணையத்தளத்தில் சேர்ப்பது தொடர்பான அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் பெற்றுகொள்வதற்கு இலங்கைத் தகவல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அமைவாக, அந்த நிறுவனத்தின் மூலம் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய விதம் குறித்து அவர்களின் பரிந்துரைகளையும், தகுதிறன்களையும் சமர்ப்பித்துள்ளனர்.

கருத்திட்டத்தை எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான அறிவைக் கொண்ட தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இந்தத் திணைக்களத்தில் இல்லாதபடியினால், கருத்திட்டத்தை எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய விதம் பற்றி குழு ஒன்றை நியமித்து அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானது என அமைச்சிற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

01.5.6.12 மகாநாயக்க சாரிக்காராமய

மகாநாயக்க தேரர்கள் தலைநகருக்கு வேலைகளுக்காக வருகை தரும் போது தேவையான சந்தர்ப்பத்தில் தங்குமிட வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக வசதிகளை வழங்குவதற்கு கொழும்பு விஜயராம மாவத்தையில் அமைந்துள்ள மகாநாயக்க சாரிக்காராமய ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூபா 16.308 மில்லியன் ஆகும். இதன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் விமானப்படையினால் மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளையில் இதன் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அடையாளம் காணப்பட்ட மேலதிகப் பணிகள் மற்றும் சந்தைப் பொருட்களின் விலை அதிக அளவில் அதிகரித்தல் போன்ற விடயங்களின் காரணமாக இந்தப் புனரமைப்புப் பணிகளை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது.

சாரிக்காராமய கட்டிடத்திற்கு இலங்கை விமானப்படையினால் ரூபா 76.41 மில்லியன் மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 6,500,000.00 மகாநாயக்க சாரிக்காராம செலவினத் தலைப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதே வேளையில் 2022 ஆம் ஆண்டு அந்த பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கான செலவு ரூபா 6,499,661.65 ஆகும்.

01.5.6.13 உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி நடவடிக்கைகள்.

01.5.6.13.1 மிஹிந்து நிவஹன வீடமைப்புக் கருத்திட்டம்.


உள்ளத்தை ஆற்றுப்படுத்துகின்ற உடலுக்குப் புகலிடமளிக்கின்ற வீடற்ற தாய் தந்தையருக்கு வழங்கப்படுகின்ற பூஜை எனும் தொனிப்பொருளின் கீழ் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த பிக்குகளின் பெற்றோருக்கு வீடொன்றைக் கட்டிக் கொடுக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் விண்ணப்பப் படிவத்திற்கான பரிந்துரை இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. 2022.09.31 ஆம் திகதியளவில் 531 விண்ணப்பங்கள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள அதே வேளையில் அந்த சகல விண்ணப்பப் படிவங்களும் வீடமைப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

01.5.6.14 சில்மாதா பயிற்சி நிலையங்களின் அபிவிருத்தி

இலங்கையில் பௌத்த சமூகத்தில் உள்ள பெண் விடுதலையை அடைந்து கொள்ளும் பொருட்டு மகாநாயக்க தேரர்களின் அனுசாசனத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்டுள்ள சில்மாதா அமைப்பை வலுவூட்டும் பொருட்டு 03 சில்மாதா பயிற்சி நிலையங்கள் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றன.

01.5.6.14.1 முலட்டியன சில்மாதா பயிற்சி நிலையம்.

03 சில்மாதா தேரர்களுக்கு நடாத்தப்படுகின்ற குறுகிய கால மற்றும் நீண்ட கால கற்கைநெறியின் பொருட்டு ரூபா *4,390,468.29* தொகை செலவிடப்பட்டுள்ளது.





01.5.6.14.2 *களனி சில்மாதா பயிற்சி நிலையம்.*

மூன்று மாடி கட்டிடத்தின் மேற்கூரை சிறிய அளவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.



01.5.6.14.3 *அநுராதபுர சில்மாதா பயிற்சி நிலையம்.*

திரையுடன் கூடிய பல் ஊடக ப்ரொஜெக்டர் பொருத்தும் பணிகளும் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகளும், அன்னதான மண்டபம் அமைக்கும் முதல் கட்டப் பணிகளும் நிறைவடைந்துள்ளன.



01.5.6.15 பௌத்த கலை மற்றும் புத்த இலக்கியங்களை வழங்குதல்

பௌத்த கலாசார பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில், ஊர்வலங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகளுக்கான கொடுப்பனவுகளும் அறிஞர்களுக்கு காணிக்கையாக வழங்கப்படுகின்றன. *2022* ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகள் பின்வருமாறு.

பௌத்த கலைகளுக்கான கொடுப்பனவு	ஊர்வலம்/ திருவிழா	மாவட்டச் செயலகம்	பிரதேச செயலகம்	ஒதுக்கீட்டு தொகை ரூபா
1.	வரலாற்று சிறப்புமிக்க ரைகம்புர ஒலபொடுவ நவம் மஹா பெரஹெர விழா - ஒலபொடுவ ஸ்ரீ ஜயவர்தனராம ரஜ மகா விகாரை, ஒலபொதுவா - ஹொரண.	களுத்துறை	ஹொரண.	*12,500.00*
			மொத்தம்	***12500.00***

01.5.6.16 பௌத்த எழுத்தாளர் உதவிகளை வழங்குதல்

தொடர் இல.	புத்தகத்தின் பெயர்	நூலாசிரியர்	வாங்குவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூ.)
1	பௌத்த பொது நிர்வாகத்தின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறை	வஜிர நாரம்பனாவ	*9,600.00*
2	நிவன் மக ஹெலி கரன சாமனேர பென சமக தெவன சித நிவன மக	வணக்கத்திற்குரிய வேகட பத்ர சில்மாதா	*5600.00*
மொத்தம்			***15,200.00***

01.5.6.17 சமய வழிபாட்டுத் தலங்களுக்காக சிவுபச உதவியை வழங்குதல்.

கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு பிரதேச செயலகத்தில் உள்ள இதர வசதிகளை வழங்குவதற்கு சிரமமாக உள்ள 10 வழிபாட்டுத் தலங்களுக்கு ரூபா 5,000.00 பெறுமதியைக் கொண்ட 10 உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கு பௌத்த அலுவல்கள் கூட்டிணைப்பு உத்தியோகத்தர்களுடன் கூட்டிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.





01.5.6.18 அரச வெசாக் கொண்டாட்டத்திற்கு இணையாக குறைந்த அபிவிருத்தியைக் கொண்ட சமயப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்.

அரச வெசாக் கொண்டாட்டத்திற்கு இணையாக குறைந்த அபிவிருத்தியைக் கொண்ட சமயப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக சமயப் பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் உபகரண உதவிகளை வழங்குவது வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டிற்காக சபரகமுவ மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சமயப் பாடசாலைகளுக்கு கட்டிடங்கள் மற்றும் உபகரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

01.5.6.19 2022 அரச வெசாக் கொண்டாட்டத்திற்கு இணையாக இரத்தினபுரி மாவட்டத்தில் சமயப் பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டம் மற்றும் வழங்கப்பட்ட ஏற்பாடு.

தொடர் இல.	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	கருத்திட்டம்	ஒதுக்கீட்டு தொகை ரூபா மில்.
01	இரத்தினபுரி	பலாங்கொடை	ராஸ்ஸகல விஜனத்கும்புர, ஸ்ரீ தர்மாஷோக சமயப் பாடசாலை கட்டடத்தைப் புனரமைப்புச் செய்தல்	0.5
02	இரத்தினபுரி	பலாங்கொடை	மாவெல, தலகொலஹின்ன, ஸ்ரீ ராகுல சமயப் பாடசாலையின் கட்டட வேலைகளை நிறைவுசெய்தல்	0.5
03	இரத்தினபுரி	பலாங்கொடை	பலாங்கொடை ரஜவக சோமானந்தா சமயப் பாடசாலையில் சுகாதார வசதிகள் அபிவிருத்தி	0.5

04	இரத்தினபுரி	பலாங்கொடை	தெலதிரிய, மஹவலதென்ன ஸ்ரீ ரத்தனானந்த சமயப் பாடசாலை கட்டடத்தைப் (தர்மசாலை) புனரமைப்பு செய்தல்	0.5
05	இரத்தினபுரி	வெலிகெபொல	ரங்வல, புலுவெல, ஸ்ரீ விஜயபோதி சமயப் பள்ளியின் கட்டிடத்தின் வேலைகளை நிறைவுசெய்தல்	0.5
06	இரத்தினபுரி	வெலிகெபொல	ரங்வல தெல்வலகந்த, ஸ்ரீ சுமணாராம சமயப் பாடசாலையில் கழிவறை அமைப்பு நிர்மாணம்	0.5
07	இரத்தினபுரி	வெலிகெபொல	ரன்வல ஸ்ரீ சுகதானந்த சமயப் பாடசாலையில் கழிவறை அமைப்பு நிர்மாணம்	0.5
08	இரத்தினபுரி	வெலிகெபொல	மெதகம, பனானை ஸ்ரீ தர்மவிஜய சமயப் பாடசாலையில் கழிவறை அமைப்பை அமைத்தல்	0.5
09	இரத்தினபுரி	கல்தொட்ட	பலாங்கொடை, வெலிபத்தவில் இல. 01 ஸ்ரீ ஞானிஸ்ஸர சமயப் பாடசாலை, சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்	0.5
10	இரத்தினபுரி	கல்தொட்ட	பலாங்கொடை ஹந்தகிரிய திவின்ன ஸ்ரீ சத்தானந்த சமயப் பாடசாலையில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்	0.5
11	இரத்தினபுரி	கல்தொட்ட	பலாங்கொடை கல்தோட்டை ஸ்ரீ சுதர்மோதய சமயப் பாடசாலையில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்	0.5
12	இரத்தினபுரி	கல்தொட்ட	பலாங்கொடை மொலமுரே ஸ்ரீ நாரத சமயப் பாடசாலையில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்	0.5
மொத்தம்				**6.0**







01.5.6.20 குறைந்த அபிவிருத்தியைக் கொண்ட சமயப் பாடசாலை அபிவிருத்திக்கு உதவி வழங்குதல் – 2022

2021 ஆம் ஆண்டில் உதவி வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஆனால் நிதி ஏற்பாடுகள் அனுப்பப்படாத, 2022 இல் ஏற்பாடுகள் வழங்கப்பட்ட சமயப் பாடசாலை அபிவிருத்திக் கருத்திட்டங்கள்.

தொடர் இல.	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	கருத்திட்டம்	ஒதுக்கீட்டு தொகை ரூபா மில்.
01	புத்தளம்	கருவலகஸ்வெவ	நெல்லிவெவ ஸ்ரீ மங்களாராம விகாரையில் உள்ள ராகுல சமயப் பாடசாலைக்கு சமயப் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்.	0.25
02	புத்தளம்	கருவலகஸ்வெவ	நெலும்வெவ போத்திருக்கராம விகாரஸ்த மயூரவங்ச சமயப் பாடசாலைக்கு சமயப் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்	0.25
03	இரத்தினபுரி	அயகம	கங்காராம விஹாரஸ்த ஸ்ரீ சோபிதா சமயப் பாடசாலையின் கட்டிடம் புனரமைப்பு	0.5
04	நுவரெலியா	கொத்மலை	ஹல்கொல்ல இல- 02, ஸ்ரீ சுகத சமயப் பாடசாலை கழிவறை அமைப்பை நிர்மாணித்தல்	0.5
05	களுத்துறை	மத்துகமை	யட்டதொல ஸ்ரீ விவேகாராம விஹாரஸ்த ஸ்ரீ சீலவிசுத்தி சமயப் பாடசாலை கட்டிடம் நிர்மாணம்	0.5
06	அநுராதபுரம்	நுவரகம்பலாத்த	விகாரமஹாதேவி மடாலய சமயப் பாடசாலையில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்	0.5
07	அநுராதபுரம்	கலென்பிந்துனு வெவ	வெலேனகம, அலிவங்குவ, உபுல்தெனிய ஸ்ரீ சுபோத சமயப் பாடசாலையில் கழிவறை அமைப்பு நிர்மாணம்	0.5
08	கண்டி	பாத்தும்பர	நாபான, குன்னேபான ஸ்ரீ பிரியதர்ஷனாராம விஹாரஸ்த, ஸ்ரீ மஹிந்த சமயப் பாடசாலையில் கழிவறை அமைப்பு நிர்மாணம	0.5
09	களுத்துறை	பாணந்துறை	பாணந்துறை, கல்துடே சித்தத்தாராம விஹாரஸ்த ஸ்ரீ சித்தார்த்த சமயப் பாடசாலை கட்டிட நிர்மாணப் பணிகள	0.5
மொத்தம்				**4.0**





01.5.6.22 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.
01.5.6.22.1 "அஞ்சலிகரணி சில்மாதா" பயிற்சி

இலங்கை பௌத்த சமூகத்தில் பௌத்த தர்மத்தின் உன்னதம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றுக்காக சில்மாதா தேரர்களினால் பாரிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் தற்போது வரையில் வளர்ச்சியடைந்துள்ள சில்மாதா பரம்பரை அந்த விடயத்தில் சரியாக இருக்கின்றது என்பதை மேலும் உருதிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், சில்மாதா தேரர்களுக்கு தமது சாசன செயற்பணிகளை மேற்கொள்வதற்கு சமூகத்திலிருந்து கிடைக்கின்ற ஊக்குவிப்பு மற்றும் உதவிகள் போதுமானதாக இருக்கின்றதா என்பது சிந்தித்துப் பார்க்க வேண்டியதொரு விடயமாக இருக்கின்றது. அதனால் இலங்கையில் பல்வேறு மாகாணங்களில் வசிக்கின்ற சுமார் 3000 சில்மாதா தேரர்களினால் பௌத்த தர்மம் பற்றிய நம்பிக்கையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அவர்களின் பௌத்த தர்மம் பற்றிய அறிவு மற்றும் கல்விஞானத்தை தொடர்ந்தும் சரியான விதத்தில் வளர்த்துக் கொள்வதற்காக அரச அணுசரனையை வழங்குவது அத்தியாவசியமான விடயமாகும்.

அதன் பிரகாரம், சில்மாதா தேரர்களின் சமய தொடர்பாடல், சமயக் கல்வியறிவு, சாசன ஒழுக்க நெறிகள் பற்றிய விழிப்புணர்வு, ஆத்மீக அபிவிருத்தி, போதனை மற்றும் துறவு வாழ்க்கை உறவுகளைப் பேணி வருவது பற்றிய விழிப்புணர்வு மற்றும் அது சம்பந்தமான நடைமுறைப் பயிற்சியை வழங்குதற்கான இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் களனி சில்மாதா பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றன.

சில்மாதா தேரர்களின் இதர வசதிகள் மற்றும் பயணச் செலவுக் கொடுப்பனவு உட்பட இரண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் ரூபா 0.55 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதற்காக அண்ணளவாக 100 சில்மாதா தேரர்கள் பங்குபற்றினர். இதற்கு மேலதிகமாக அநுராதபுர புதிய சங்கமித்தாராமையில் அண்ணளவாக 75 சில்மாதா தேரர்களுக்கு இரண்டு நாள் வதிவிட செயலமர்வு நடாத்தப்பட்டது. இதற்காக அண்ணளவாக ரூபா மூன்று இலட்சம் செலவிடப்பட்டது.





அநுராதபுரம் புதிய சங்கமித்தாராமவில் இடம்பெற்ற மருத்துவ முகாம் மற்றும் இரண்டு நாள் வதிவிட செயலமர்வு






01.5.6.23 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பிரிவில் பதிவு செய்தல்.

- *சில்மாதா தேரர்களின் எண்ணிக்கை - 284*
- *துறவு வாழ்க்கை பூண்ட (சில்மாதா தேரர்கள்) எண்ணிக்கை - 10*
- *சில்மாதா மடாலயங்களின் எண்ணிக்கை - 14*
- *வழிபாட்டுத்தல நன்கொடை சபைகளின் எண்ணிக்கை. - 21*
- *மடாலய நன்கொடை சபைகளின் எண்ணிக்கை. - 03*

01.5.7 சமயப் பாடசாலைப் பிரிவு

அமெரிக்க தேசத்தவரான திரு. ஹென்றி ஸ்டீல் ஓல்கட் அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைவாக 1895 இல் ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதியன்று காலி, வெலிவத்த ஸ்ரீ விஜயானந்த விகாரையில் முதலாவது சமயப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பௌத்த சமயப் பாடசாலைக் கல்வி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாடு பூராகவும் விரிவடைந்த அதே வேளையில் தற்போது நாட்டில் 10,320 பௌத்த சமயப் பாடசலைகள் இயங்கிவருகின்ற அதே வேளையில் 2,153,050 மாணவர்கள் அதில் சமயக் கல்வியை கற்று வருகின்றனர். 126,090 ஆசிரியர்கள் எந்தவிதமான உதவியுமின்றி இதற்காகத் தமது சேவையை வழங்கி வருகின்றனர்.

"பௌத்த தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னைப் பற்றியும் தனது சூழலைப் பற்றியும் சரியான புரிந்துணர்வைக் கொண்ட அந்தப் புரிந்துணர்வுக்கு அமைவாக நடந்து கொள்கின்ற அவ்வறான நடத்தைகளின் பெறுபேறுகளை அனுபவிக்கின்ற குணத்தையும், அறிவையும் கொண்ட மாணவர் சமூகத்தை உருவாக்குவது சமயப் பாடசாலைக் கல்வியின் குறிக்கோளாகும் .

இந்த உன்னதக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக சமயப் பாடசாலைக் கல்வியை செயற்படுத்துவது சமயப் பாடசாலைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளை அதற்காக 4 பிரதான துறைகளின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. *சமயப் பாடசாலை மாணவர் அபிவிருத்தி*
2. *சமயப் பாடசாலை ஆசிரியர் அபிவிருத்தி*
3. *சமயப் பாடசாலை முகாமைத்துவம்*
4. *ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்.*

இந்தத் துறைகளின் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. சமயப் பாடசாலை மாணவர் அபிவிருத்தி

i. சமயப் பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகித்தல்.

ii. சமயப் பாடசாலைகளின் 6-10 தரங்களுக்கான பரீட்சையை நடாத்துதல்.

iii. பிரதேச, மாவட்ட மற்றும் அகில இலங்கை ரீதியாக மாணவர் தேர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

2. சமயப் பாடசாலை ஆசிரியர் அபிவிருத்தி

1.சமயப் பாடசாலை ஆசிரியர் கொடுப்பனவை வழங்குதல்.

2.சமயப் பாடசாலை சீருடை வழங்குதல்.

3.சமயப் பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சையை நடத்துதல்.

4.சமய பல்கலைக்கழக டிப்ளோமா கற்கைநெறிகளை நடாத்துதல்.

5.சமயப் பாடசாலை ஆசிரியர் திறன் விருத்தி பயிற்சி செயலமர்வுகளை நடாத்துதல்.

6.சமாதான நீதவான் பதவியை வழங்குதல்.

3. சமயப் பாடசாலை முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி

1.வருடாந்த ஆசிரியர் மாணவர் தகவல்களைத் திரட்டுதல்.

2.சமயப் பாடசாலைத் தினத்தைக் கொண்டாடுதல்.

3.சமயப் பாடசாலை ஆசிரியர் அடையாள அட்டைகளைத் தயாரித்தல்.

4.சமயப் பாடசாலைகளைப் பதிவு செய்தல்.

5. சமயப் பாடசாலை கொடி வாரத்தை நடைமுறைப்படுத்தல்.

4. ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்.

I. திரிபீடகத்தை இலகுவான சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தல்.

II. புத்த ஜயன்தி புத்தக நிலையம்.

01.5.7.1 சமயப் பாடசாலை மாணவர் அபிவிருத்தி

(i) சமயப் பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிட்டு விநியோகித்தல்

ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்குத் தேவையான சமயப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு, சமயப் பாடசாலை பாடப் புத்தகங்களைத் தொகுத்து, அச்சிட்டு, சமயப் பாடசாலைகளுக்கு விநியோகிப்பது சமயப் பாடசாலைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

முக்கியமாக அரசாங்க அச்சகத்தினால் அச்சிடப்படும் பாடப் புத்தகங்கள் வெயங்கொடையில் உள்ள சமயப் பாடசாலை புத்தக களஞ்சியத்தினூடாக நேரடியாக சாசனப் பாதுகாப்பு சபைகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

2021 இல் 3,953,300 பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன, அவற்றில் 50% சதவீதம் 2022 ஆம் ஆண்டுக்காக விநியோகிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டிற்கான மீதமுள்ள 50% பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டிற்கு, கையேடுகளை அச்சிடுவதற்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை, மேலும் கையேடுகளை விநியோகிக்க ரூபா 6 மில்லியன் ஒதுக்கப்பட்டது. தற்போது சமயப் பாடசாலைகளில் புத்தக விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கை	*= 22*
பிரதேச சாசனப் பாதுகாப்பு சபைகளின் எண்ணிக்கை	*= 280*
சமயப் பாடசாலைகளின் எண்ணிக்கை	*= 8000*
விநியோகிக்கப்பட்டமொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை	*= 1868896*

(ii) சமயப் பாடசாலைகளில் 6-10 ஆம் தரங்களுக்கான பரீட்சையை நடாத்துதல்.

இலங்கை பூராகவும் உள்ள சகல சமயப் பாடசாலைகளிலும் கற்கின்ற மாணவர்களின் சமய அறிவைப் பரீட்சித்தல் மற்றும் அவர்களை மதிப்பீடு செய்தல் ஆகிய நோக்கத்துடன் நடாத்தப்படுகின்ற இந்த தரப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாத இறுதியில் நடாத்தப்படுகின்றது.

2020 ஆம் ஆண்டில் பரீட்சைக்காக 10,262 நிலையங்களில் 1,067,946 விண்ணப்பதாரர்கள் தோற்றவிருந்த போதிலும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக சமயப் பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததனால் பரீட்சையை நடாத்த முடியவில்லை. 2021 ஆம் ஆண்டு தரப் பரீட்சை, 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டது. அதற்கான சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கை தற்போது நிறைவடைந்துள்ளது. சமயப் பாடசாலை தரப் பரீட்சைக்காக 2022 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடாக ரூபா 22 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த அதேவேளையில் அது போதுமானதாக இல்லாமையின் காரணமாக மேலும் ரூபா 17.7 மில்லியன் ஒப்படைக்கப்பட்டது. 2022 ஆம் இறுதியில் இந்த சகல தொகைகளும் செலவிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் சமயப் பாடசாலைத் தர பரீட்சை அரசாங்கப் பாடசாலைகளில் மூன்றாவது பாடசாலைக் கல்வியாண்டின் இறுதியில் 2023 மார்ச் மாதம் 26 ஆம் திகதி நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(iii) பிரதேச, மாவட்ட மற்றும் அகில இலங்கை ரீதியில் மாணவர் தேர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

சமயப் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்க்கவும், புத்த மத போதனைகளை நடைமுறையில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பை வழங்குவதன் மூலம் நற்குணமுள்ள அறிவார்ந்த குழந்தைகளின் தலைமுறையை உருவாக்கவும் மாணவர் திறன் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட கோவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதார, எரிபொருள் நெருக்கடி மற்றும் தொடர்புடைய நடைமுறை பிரச்சனைகளின் காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை நடத்த முடியவில்லை.

2023 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சித் திட்டத்தை ஆண்டு இறுதியில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

01.5.7.2 சமயப் பாடசாலை ஆசிரியர் திறன் விருத்தி

(i) சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு வழங்குதல்

எந்தவொரு தயவும் இன்றி சமயப் பாடசாலை ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் சேவையைப் பாராட்டி சமயப் பாடசாலை ஆசிரியர் சேவையில் தொடர்ச்சியாக ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள 18 வயதுக்கு மேற்பட்ட சகல ஆசிரியர்களுக்கும் 2006 ஆம் ஆண்டு முதல், நூலகக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2006 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த நூலக உதவித்தொகை ரூபா. 2,000.00 மற்றும் மாதாந்தம் வழங்கப்பட்டு வந்த ரூபா. 200.00 வீத சமய ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஆகியவற்றை ஒன்றிணைத்து 2017 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் ரூபா 5,000 ஆசிரியர் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றது.


2022 ஆம் ஆண்டுக்காக ரூபா 5000.00 வீதம் இந்தக் கொடுப்பனவை வழங்க வேண்டியிருந்த போதிலும் காணப்பட்ட நிதி ஏற்பாட்டு நிலவையின் அடிப்படையில் ரூபா 3,300.00 வீதம் ஆசிரியர் கொடுப்பனவை 223 பிரதேச சாசனப் பாதுகாப்பு சபைகளிலுள்ள 10,279 சமயப் பாடசாலைகளின் 111,614 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள மொத்த நிதி ஏற்பாட்டுத் தொகை ரூபா 368,326,200.00 ஆகும். இதற்காக சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வசதிகளை வழங்கும் செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டது.

(ii) *சமயப் பாடசாலை சீருடை வழங்குதல்*


எந்தவொரு தயவும் இன்றி சமயப் பாடசாலை ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் சேவையைப் பாராட்டி சமயப் பாடசாலை ஆசிரியர் சேவையில் தொடர்ச்சியாக ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள 18 வயதுக்கு மேற்பட்ட சகல ஆசிரியர்களுக்கும் 2004 ஆம் ஆண்டு முதல் சீருடை வழங்கப்படுகின்றது.

சீருடை வழங்குவது பற்றி ஒவ்வொரு ஆசிரியரிடமும் நேர்மறையான மனப்பாங்கு காணப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டுக்காக சீருடைகளை பெறுவதற்கு 98,790 ஆசிரியர்களுக்கு தகைமை பெற்றுள்ளனர். இந்த ஆசிரியர்களிடையே 50,489 ஆசிரியர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ள அதே வேளையில் ஏனைய 48,301 ஆசிரியர்களுக்கும் ஆண் ஆசிரியர்களுக்கு ரூபா 1,700.00 வீதமும் பெண் ஆசிரியைகளுக்கு ரூபா 2,500.00 வீதமும் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 107,372,500.00 நிதி ஏற்பாடு பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கி அனுப்பப்பட்டுள்ளது. இதற்காக சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வசதிகளை வழங்கும் செலவு விடயத்தின் கீழ் இருந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,500.00 பெறுமதியான சீருடைக் கொடுப்பனவை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள போதிலும் அதற்குப் போதுமான நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை.



மாவட்ட மட்டத்தில் 2022- சமயப் பாடசாலைகளின் எண்ணிக்கை-10320



(மாவட்டம்)

(iii) சமயப் பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சையை நடாத்துதல்

சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கே உரித்தான மற்றும் ஆசிரியர்களிடமிருந்து அதிக வரவேற்பைப் பெற்ற சமயப் பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சையை தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சமயப் பாடசாலை ஆசிரியர்களின் அடிப்படைக் கல்வித் தகைமைகளை பூர்த்திசெய்தல், கல்வித் தகைமைகளை மேம்படுத்துதல், ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டுதல், அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளுதல், உயர்கல்வி நோக்கிச் செல்வதற்கு வழிவகுப்பதினூடாக சமூக அங்கீகாரத்தை உருவாக்கி அதன் மூலம் அவர்களின் சேவையை மக்களால் பாராட்டச் செய்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுகின்றது.

2022 ஜூன் 18 ஆம் திகதியன்று நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த சமயப் பாடசாலை ஆசிரியர் சான்றிதழ் பரீட்சை, நாட்டில் அப்போது ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி மற்றும் அதனோடு இணைந்த நடைமுறை பிரச்சனைகளின் காரணமாக அகில இலங்கை சாசனப் பாதுகாப்பு சபையின் ஆலோசனையின் படி நடாத்தப்படவில்லை, அதேவேளையில் 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் சான்றிதழ் பரீட்சையை 2023 ஜூன் மாதம் 17 ஆம் திகதியன்று நடத்துவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

(iv) சமயப் பல்கலைக்கழக டிப்ளோமா கற்கைநெறி நடத்துதல்

சமயப் பாடசாலை ஆசிரியர்களின் அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில், சமயப் பல்கலைக்கழகம், இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்துடன் இணைந்து, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், 19 மாவட்ட செயலகங்களின் மேற்பார்வையில் பௌத்த தர்ம டிப்ளோமா பாடநெறியை நடத்துகிறது. இதுவரை, 10,000 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் டிப்ளோமா பெற்றவர்களாக மாறியுள்ளனர். இந்நிலையில், இந்த பாடநெறி தற்போது உயர் டிப்ளோமா கற்கைநெறியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிற்காக, ஆண்டின் தொடக்கத்தில் 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், அந்தத் தொகை நிகழ்ச்சித் திட்டத்தை நடத்த போதுமானதாக இல்லாத காரணத்தினால், வருட இறுதியில் மேலும் 6.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. சமயப் பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டத்தின் விரிவுரையாளர் கட்டணம் மற்றும் நிலையத்தின் செலவுகளை செலுத்துவதற்காக மாவட்ட செயலகங்கள் மற்றும் பிராந்திய செயலகங்களுக்கு 6.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2018/2019 கல்வியாண்டுக்காக பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட பாடநெறியில் 1544 சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும்

நிகழ்வு 2023 சனவரி மாதத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2021/2022 ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் பாடநெறியின் முதலாம் ஆண்டு, இரண்டாம் அரையாண்டு 2022/10/01 இல் ஆரம்பித்து நடாத்தப்படும்.

(v)சமயப் பாடசாலை ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சிச் செயலமர்வுகளை நடத்துதல்


சமயப் பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக பல்வேறு தரப்பினரும் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளையில், இதற்கென தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி வளவாளர்கள் அடங்கிய குழு தயாரிக்கப்பட்டு அவர்களுக்கான 04 தொகுதிகளின் கீழ் முறையான பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ஆசிரியர் பயிற்சிக் குழுவை நிறுவுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023ஆம் ஆண்டு முதல் நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

01.5.3.2 சமயப் பாடசாலை முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி


(i)வருடாந்த ஆசிரியர்கள் மாணவர்கள் பற்றிய தகவல்களை திரட்டுதல்

சமயப் பாடசாலை ஆசிரியர்களின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட திட்டமிடல்களைத் தயாரித்தல் மற்றும் கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் இந்த நிகுச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2022 இன் தகவல்களின்படி பதிவுசெய்யப்பட்ட சமயப் பாடசாலைகளில் 10,297 சமயப் பாடசாலைகள் செயற்படும் நிலையில் காணப்படுகின்ற அதேவேளையில் 126,090 சமயப் பாடசாலை ஆசிரியர்கள் எந்தவொரு தயவும் இன்றி சமயப் பாடசாலை ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். 2,153,050 மாணவர்கள் அவற்றில் கல்வி கற்று வருகின்றனர்.

இலங்கையில் சமயப் பாடசாலை மாணவர் எண்ணிக்கையின் வளர்ச்சி




2022 ஆம் ஆண்டில் 21 மாவட்டங்களிலும் 10320 சமயப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை 2,153,050 ஆகும்.



வருடம் (தரம்)

ஆசிரியர்களின் எண்ணிக்கை



வருடம்

(ii) சமயப் பாடசாலை தினத்தைக் கொண்டாடுதல்

இலங்கையின் முதலாவது பௌத்த சமயப் பாடசாலையான காலி வெலிவத்தை விஜயானந்த சமயப் பாடசாலை 1895 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டுள்ள அதேவேளையில் அன்றைய தினத்தை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 03 ஆம் திகதி தேசிய சமயப் பாடசாலை தின விழா கொண்டாடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டில் 127 ஆவது சமயப் பாடசாலை தின விழாவை கொண்டாடும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை ஆகஸ்ட் 03 அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த போதிலும், நாட்டில் நிலவும் கோவிட் 19 தொற்றுநோய் மற்றும் அப்போது ஏட்டப்பட்டிருந்த பொருளாதார, நெருக்கடி தொடர்பான நடைமுறைப் பிரச்சனைகளின் காரணமாக நடத்த முடியவில்லை.

(iii) சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையாள அட்டைகளை தயாரித்தல்

எந்தவொரு உதவியும் இல்லாமல் சமயப் பாடசாலைக் கல்வியை வழங்கி வரும் ஆசிரியர்களுக்காக தொடர்ச்சியாக ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இந்த அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டுக்காக 1500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளையில், ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் மூலம் தற்போது புதிய அடையாள அட்டைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iv) சமய பாடசாலைகளை பதிவு செய்தல்

நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து பௌத்த சமயப் பாடசாலைகளும் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் சமயப் பாடசாலைகள் பிரிவினால் பதிவு செய்யப்படுகின்றன. அதற்கேற்ப இவ்வாறு பதிவு செய்யப்பட்ட சமயப் பாடசாலைகளுக்கு இந்த திணைக்களத்தின் மூலம் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சி திட்டங்களுடன் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கின்ற அதேவேளையில், பாடப் புத்தகங்கள் வழங்குதல், ஆசிரியர் சீருடைகள் மற்றும் கொடுப்பனவுகள் போன்ற நன்மைகள் கிடைக்கும். தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள சமய பாடசாலைகளின் எண்ணிக்கை 11150 ஆகும்.

(v) சமயப் பாடசாலை கொடி வாரத்தை நடைமுறைப்படுத்துதல்

இந்தக் கருத்திட்டத்தின் முதன்மையான நோக்கம், புத்த சாசனத்தின் மேன்மை மற்றும் சமயப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலனுக்காக அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபை மேற்கொள்ளும் பணிகளுக்கு நிதியுதவியைப் பெற்றுக் கொடுப்பதாகும். இதன்படி, அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபையின் பிரதான வருமானமாக சமயப் பாடசாலைக் கொடிகள் விற்பனையாகக் கருதப்படுகிறது. இது சமயப் பாடசாலை தினத்திற்கு இணையாக ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது.

இதன் கீழ், சமயப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறுநீரகம், கல்லீரல், புற்றுநோய் மற்றும் இதய நோய்

அறுவை சிகிச்சைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கும் தகம்குரு சுவசவிய நிகழ்ச்சித் திட்டம், சமயப் பாடசாலைகளில்தெரிவுசெய்யப்பட்ட க.பொ.த. உயர்தரக் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவித்தொகை வழங்குதல், அவசர காலங்களில் செயல்படுத்தப்படும் விகாரையிலிருந்து கிராமத்திற்கு நிகழ்ச்சித் திட்டம், வசிப்பதற்கு தகுந்த வீடற்ற குறைந்த வருமானம் பெறும் பெற்றோருக்கு வீடு கட்ட அல்லது மேம்படுத்துவதற்கு புத்த புத்திரன் பெற்றோர் அஞ்சலி வீடு திட்டம் போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 2022 ஆம் ஆண்டு சமயப் பாடசாலை கொடி வாரத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

4.. ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்

(i) திரிபீடகத்தை எளிய சிங்களத்தில் மொழிபெயர்த்தல்

பனை ஓலை ஏடுகளில் பாலி மொழியில் மட்டும் எழுதப்பட்ட திரிபிடக பாலி தர்மம் முழுவதையும் ஸ்ரீ சம்புத்தர் பரிநிர்வாணமடைந்து 2500 ஆம் ஆண்டு (கி.பி. 1956) பூர்த்தியடைந்ததை முன்னிட்டு பௌத்த மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, திரிபிடக கிரந்தம் தயாரிப்புச் சபையினால் பாலி திரிபிடகத்தை சிங்களத்தில் மொழிபெயர்த்து புத்த ஜெயந்தி திரிபிடக புத்தகத் தொடர் எனும் பெயரில் ஐம்பத்தேழு (57) கிரந்தங்களாக அச்சிடப்பட்டது.

அந்த மொழிபெயர்ப்புகளை எளிய சிங்கள மொழியில் மொழிபெயர்த்து, வாசகர்கள் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில், 1993ல், முதல் புத்த ஜெயந்தி திரிபிடக புத்தகத் தொடரின் சிங்கள மொழிபெயர்ப்பை எளிய சிங்கள மொழியில் மீண்டும் எழுத முடிவு செய்யப்பட்டது. மகா நாயக்க மகா தேருவைக் கொண்ட சுருக்கமான திரிபிடக நூல் தொகுப்பு சபை உருவாக்கப்பட்டது. இதுவரை மேற்கண்ட 57 நூல்களில் 32 நூல்கள் 27 கிரந்தங்களாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நிறுவப்பட்ட சபையினால் தொகுக்கப்பட்ட திரிபிடக நூல்கள் அரச அச்சகத்தால் அச்சிடப்பட்டு மக்களிடையே பிரபலப்படுத்தப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டு இதற்கென 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு, வருட இறுதிக்குள் இந்தப் பணம் அனைத்தும் செலவிடப்பட்டது.

(ii) புத்த ஜெயந்தி புத்தக சாலை

பொதுமக்களின் சமய அறிவை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும் தனித்துவமான சமயப் நூல்களை அச்சுச் செலவில் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் புத்த ஜயந்தி புத்தகசாலை பராமரிக்கப்படுகின்றது. எளிய சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட திரிபிடக புத்தகங்கள், பௌத்த கலைக்களஞ்சியங்கள், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட புத்தகங்கள், இங்கு விற்பனைக்கு உள்ளன.

தற்போது, திரிபிடகம் தொடர்பான 37 புத்தகங்கள், 21 பௌத்த கலைக்களஞ்சியங்கள் (ஆங்கிலம்), 04 சிங்கள பௌத்த விளக்க நூல்கள் மற்றும் சஞ்சிகைகள், 12 ஆங்கில பௌத்த விளக்க நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் விற்பனைக்கு உள்ளன.

2022 டிசம்பர் மாதம் வரை புத்தக விற்பனை மூலம் ரூபா 16,026,153.00 பெறப்பட்டுள்ளது.

01.5.8 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் அதனுடன் இணைந்த பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க விகாரைகள் மற்றும் அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் (4) 1 பிரிவின் மூலம் நிர்வகிக்கப்படும் வழிபாட்டு தலங்கள் ஆகியவற்றில் இடர் முகாமைத்துவம், நல்லாட்சி மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை நடைமுறைப்படுத்துதல் பற்றிய சுயாதீன சான்றிதழ் ஒன்றை வழங்குதல் மற்றும் ஆலோசனைரீதியான பணிகளை மேற்கொள்ளுதல் அதேபோன்று, அந்த வழிபாட்டு தலங்களை கணக்காய்விற்கு உட்படுத்துதல், அந்த வழிபாட்டு தலங்களுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்குதல் என்பன இந்த பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது

01.5.8.1 பிரதான பணிகள்

- *1931 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க விகாரைகள் மற்றும் அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 4(1) இன் கீழ் காணப்படுகின்ற வழிபாட்டுத் தலங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.*
- *பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் அனைத்து கணக்காய்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.*
- *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை கூட்டுதல்,*
- *உள்ளக நிருவாக அமைப்பை வலுப்படுத்துவதற்கு உதவுதல்.*
- *நல்ல கணக்கு மற்றும் நிதி முகாமைத்துவத்திற்கு உதவுதல்.*
- *வளங்களை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்வதில் உதவுதல்.*
- *செயலாற்றுகை இலக்குகளை அடைந்துகொள்வதற்கு உதவுதல்.*

01.5.8.2 உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31 ஆம் தேதிக்கு முன்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்து அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதன்படி செயல்படுதல்

01.5.8.3 எதில்கால இலக்குகள்

2023 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டம் ஜனவரி 31 ஆம் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதேவேளையில் 2023 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட கணக்காய்வின்அமைப்பு பின்வருமாறு.

விடயம்	மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை
வழிபாட்டுத் தலங்களின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்கள் தொடர்பான கணக்காய்வுகள்	*23*
திணைக்களத்திற்குள் கணக்காய்வு	*06*
பிராந்திய அலுவலகம்/ சில்மாதா பயிற்சி நிலையங்களின் கணக்காய்வுகள்	*03*
ஏனைய விசாரணைகள்	*-*
முகாமைத்துவ குழுக் கூட்டம் (காலாண்டு)	*04*
மொத்தம்	***36***

01.5.8.4 விசேட வெற்றிகள் (சவால்கள்)


2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், நாட்டின் நிலவிய கோவிட் நெருக்கடி மற்றும் ஒரு வருடம் முழுவதும் காணப்பட்ட பொருளாதாரச் சிக்கல்கள், அத்துடன் அரசாங்கத்தின் கடுமையான நிதிக் கட்டுப்பாடு ஆகியவற்றால், கணக்காய்வுத் திட்டத்தின்படி கணக்காய்வு பணிகளை மேற்கொண்டு 97% முன்னேற்றத்தை பதிவு செய்ய முடிந்ததை உள்ளக கணக்காய்வுப் பிரிவின் சாதனையாக விவரிக்கலாம்.

01.5.8.5 முன்னேற்றம்

2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தின் படி, பின்வரும் விடயங்களின் கீழ் கணக்காய்வுகள் நடத்தப்பட்ட அதேவேளையில் அதன் முன்னேற்றத்தை பின்வருமாறு சுருக்கமாக சமர்ப்பிக்க முடியும்.

விடயம்	மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை	முன்னேற்றம்
வழிபாட்டுத் தலங்களின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்கள் தொடர்பான கணக்காய்வுகள்	17	17	**100%**
திணைக்களத்திற்குள் கணக்காய்வு	13	12	**93%**
பிராந்திய அலுவலகம்/ சில்மாதா பயிற்சி நிலையங்களின் கணக்காய்வுகள்	03	03	**100%**
ஏனைய விசாரணைகள்	02	02	**100%**
முகாமைத்துவ குழுக் கூட்டம் (காலாண்டு)	04	04	**100%**
மொத்தம்	**39**	**38**	**97%**

பல்வேறு நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களை ஒழுங்கமைப்பது தொடர்பான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், நாட்டின் நிலவிய நிலைமையின் காரணமாக, திணைக்களம் நிகழ்வுகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்யாத காரணத்தால் கணக்காய்வுகளைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.



2022 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள்

01. அம்மடுவ சிறிய கதிர்காம தேவாலயம்
02. ஸ்ரீ மஹா கதிர்காம தேவாலயம்
03. சபரகமுவ மகா சமன் தேவாலயம்
04. ஸ்ரீ தலதா மாளிகை
05. பொத்குல் ரஜமஹா விகாரை
06. தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயம்
07. பொல்தும்பே சமன் கோவில்
08. வில்பாவ ஸ்ரீ பத்தினி தேவாலயம்
09. உக்கல் அழுத் நுவர கதிர்காம தேவாலயம்

10. கண்டி ஸ்ரீ மகா நாத தேவாலயம்
11. சீனிகம ஸ்ரீ மகா தெவொல் தேவாலயம்
12. ஈரியவெட்டிய சில்மாதா தலைமையகம் மற்றும் பயிற்சி நிறுவனம்
13. உத்தியோகபூர்வ ஒதுக்க வாகனப் பராமரிப்பு குறித்த கணக்காய்வு விசாரணை (அறிக்கை 2)
14. அனுராதபுர புதிய சங்கமித்தா மடாலயம், தொடர்பான கணக்காய்வு அறிக்கை
15. கிரிவெஹர ரஜ மஹா விகாரையின் கணக்காய்வு அறிக்கை
16. முலட்டியான பியதாச ரத்நாயக்க ஞாபகார்த்த சில்மாதா பயிற்சி நிறுவனத்தின் கணக்காய்வு அறிக்கை
17. திணைக்களத்தின் கட்டிட பராமரிப்பு பணிகளின் கணக்காய்வு
18. அரச உத்தியோகத்தர்களின் பிணை பாதுகாப்பு வைப்பு
19. சில்லறைக் காசு தொடர்பான கணக்காய்வு அறிக்கை
20. திணைக்களத்தில் மூலதனப் பொருட்களை வாங்குவது தொடர்பான கொள்முதல் கணக்காய்வு (2 அறிக்கைகள்)
21. கொட்டபோவ சின்னக் கதிர்காம தேவாலயம்
22. மெதகொட பத்தினி தேவாலயம்
23. சமயப் பாடசாலை ஆசிரியர்களின் சீருடைகள் மற்றும் நூலக கொடுப்பனவுகள் தொடர்பான அறிக்கை
24. வருடாந்த சுற்றாய்வு கணக்கெடுப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கை பற்றிய கணக்காய்வு (2 அறிக்கைகள்)
25. பெல்மடுல்ல ரஜ மஹா விகாரை
26. ஸ்ரீ பாதஸ்தான ராஜ மஹா விகாரை
27. 2022 அரச வெசாக் பண்டிகையுடன் இணைந்த முதல் காலாண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் வழங்கப்பட்ட வளர்ச்சியடையாத சமயப் பாடசாலைகளின் முன்னேற்றத்தின் கணக்காய்வு
28. மஹியங்கனய ரஜ மஹா விகாரை
29. முத்தியங்கனய ரஜ மஹா விகாரை
30. தம்புள்ளை ரஜ மஹா விகாரை

மேற்கூறிய கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக, பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

- வருடத்திற்குரிய 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்.
- 2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட பிற நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியமை

01.5.9 பௌத்த அலுவல்கள் பிராந்திய அலுவலகம் - கண்டி

கண்டி, மாத்தளை, கேகாலை, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் உள்ள முத்தியங்கன ரஜமஹா விகாரை, மஹியங்கன ரஜமஹா விகாரை, மஹியங்கன சமன் தேவாலயம் உட்பட விகாரைகள் மற்றும் அறநிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் 4 (1) மற்றும் 4 (2) பிரிவுகளின் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும் தேவாலயங்கள் உட்பட 92 வழிபாட்டு தலங்களும் ஏனைய 2580 வழிபாட்டு தலங்களின் கடமைகள் இந்த அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும்,

வழிபாட்டு தலங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள், சமயப் பாடசாலை மாணவர் சமூகம் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான செயற்பாடுகள், பௌத்த சங்கங்கள் தொடர்பான செயற்பாடுகள் என பௌத்த சமூகத்தின் ஆன்மீக அபிவிருத்தியின் பொருட்டு அமுல்படுத்தப்படும் ஏராளமான பல்வேறு வேலைத்திட்டங்களை பிராந்திய ரீதியில் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

01.5.9.1 பிரதான பணிகள்

- ஸ்ரீ தலதா மாளிகாவ, சத்தர மகா தேவாலயம் மற்றும் கிராமப்புற தேவாலயத்திற்கான தியவடன நிலமே மற்றும் பஸ்நாயக்க நிலமேகளை நியமிக்கும் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- நிர்வாக விகாரைகள் மற்றும் அறநிலையங்களுக்கு நம்பிக்கைப்பொறுப்பாளர்களை நியமித்தல்.
- நம்பிக்கைப்பொறுப்பு பிணை வைத்தல் மற்றும் விடுவித்தல்.
- சன்னதிகளின் சொத்துக்களை நம்பிக்கைப்பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்தல்.
- வழிபாட்டு தலங்களுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடுதல்.
- பரம்பரை உரிமைகளைப் பெறுவதற்கான ஆவணங்களை பராமரித்தல்.
- வருடாந்த கணக்கு அறிக்கைகளை வரவழைத்தல் பரிசீலனைசெய்தல். நிதியை விடுவித்தல்.
- வழிபாட்டு தலங்களின் தகராறுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
- ஸ்ரீ தலதா பெரஹெரா மற்றும் உபசம்பதா நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

- சமயப் பாடசாலை திருவிழாக்கள் மற்றும் பிற மத நிகழ்வுகளில் கலந்துகொள்ளுதல் மற்றும் உதவுதல்.

01.5.9.2 எதில்கால இலக்குகள்

1. இந்த அலுவலகத்தால் பராமரிக்கப்படும் வரிக் கோப்புகளில் வரி ஒப்பந்தம் காலாவதியான வரிக் கோப்புகளைப் பற்றி வழிபாட்டுத் தலங்களின் பொறுப்பாளர்களுக்குத் தெரிவிப்பதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்தல்.

2. வழிபாட்டுத் தலங்களின் காணி வரி தொடர்பான தரவுகள் இணையத்தின் அடிப்படையில் கணினிமயமாக்கப்பட்ட தரவுத் தொகுதியில் உள்ளிடுவது ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளையில் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த நடவடிக்கையின் சுமார் 80% பணிகள் நிறைவடைந்துள்ளன. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் இறுதிக்குள், தரவு உள்ளீட்டை நிறைவுசெய்து அதை இற்றைப்படுத்திய நிலையில் வைத்திருத்தல்.

3. மேலே குறிப்பிட்டுள்ள தரவுத் தொகுதியின் இற்றைப்படுத்தலின் அடிப்படையில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை வரித் தொகையை திருத்துவது தொடர்பான கோப்புகளை இற்றைப்படுத்தும் பணியை எளிதாக்குதல்.

4. 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, இந்த அலுவலகத்தினால் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட பல கடிதங்களை ஒரே உறையில் உள்ளிடுவதற்கும், அருகிலுள்ள நிறுவனங்கள் மற்றும் விகாரைகள் தொடர்பான கடிதங்களை கையால் வழங்குவதற்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. எழுதுபொருள் செலவுகளை குறைக்க A4 தாளில் இரண்டு கடிதங்கள் அச்சடிக்கப்படுகின்றன. மேலும் இந்த அலுவலகத்தில் செலவுகளைக் குறைப்பதற்கான திட்டத்தைத் தயாரித்தல்.

5. இந்த அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 92 வழிபாட்டுத் தலங்கள் தொடர்பாக ஒவ்வொரு வழிபாட்டுத் தலத்தினதும் அனைத்து தகவல்களையும் கொண்ட அறிக்கையை தயாரித்தல். இந்த அறிக்கையில் வழிபாட்டுத் தலத்தின் புகைப்படங்கள், பராமரிப்பாளரின் விவரங்கள், அணுகுகை வீதி, வழிபாட்டுத் தலத்திற்குச் சொந்தமான காணி, வரி பத்திரத்தின் அளவு போன்ற தகவல்களை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்களில், இந்த அலுவலக அதிகாரிகளின் பங்கேற்புடன், சிரமதானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் குறைந்த வசதிகள் கொண்ட வழிபாட்டுத் தலங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டில் தயாரித்தல்.

01.5.9.3 சமூக நலன்புரி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்.

1. வழிபாட்டுத் தலங்களைக் குத்தகைக்கு வழங்கும் போது பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்படுகின்ற தடைநீக்கம் பற்றிய அறிக்கையை வழங்கும் போது பிரிவிற்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தருக்கும் பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் குத்தகைக்கு வழங்க உத்தேசித்துள்ள காணித் துண்டை குறிப்பாக அடையாளம் காணும் சிரமங்கள் காணப்படுகின்றமை என்பது அடிக்கடி அறிவிக்கப்படுகின்றது. அதற்கு அமைவாக வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகள் பற்றி வழிபாட்டுத் தலங்களின் பொறுப்பாளர்களையும் இணைத்துக் கொண்டு தொடர்புடைய தரப்பினர்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வுக்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.

2. கண்டி மாவட்டத்திற்குள் தெரிவு செய்யப்பட்ட சமயப் பாடசாலைகள் சிலவற்றின் மாணவர்களை இலக்காகக் கொண்டு அவர்களின் மனப்பாங்கு விருத்திக்காக வளவாளர்களின் ஒத்துழைப்புடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

3. ஸ்ரீ பாத யாத்திரைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் இந்த அலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் சுற்றுச் சூழலை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

01.5.9.4 விசேட சவால்கள்

1. *வதிவிடத்திற்காக குத்தகைக்கு வழங்கும் போது நகர அதே போன்று கிராம காணிகளுக்கு ஒரே சமமான வரித் தொகையை அறவிடுவதன் காரணமாக ஏற்படுகின்ற சமநிலையற்ற தன்மையினால் வழிபாட்டுத் தலங்களின் காணிகளைக் குத்தகைக்காகப் பெற்றுக் கொள்வதற்கு அந்த காணிகளின் உரிமையாளர்கள் முன்வராமை மற்றும் அந்தக் காணிகள் பாதுகாப்பற்றதாக இருக்கின்றமை அதே போன்று வருமானங்கள் இழக்கக் கூடியதாக இருக்கின்றமை.*

2. *பரம்பரைக் காணிகளை அகற்றும் போது அவ்வாறு அகற்றி ஒரு மாதத்திற்குள் பௌத்த அலுவல்கள் ஆணையாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ள போதிலும் காணியை அகற்றுவதற்கு முன்னர் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக கடமை காணிகள் வழிபாட்டுத் தலங்களில் இருந்து அகற்றப்படுதல் மற்றும் மாற்று மதத்தவர்களின் கைகளுக்குச் செல்லுதல்.*

